2005 ஏப்ரல் 4]

286—

குளம் அமைத்தல்

***35797—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. கே.வி. முரளிதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வட்டம், தாகட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கப்படுமா என்று கேட்டிருந்தேன்.* Myrada *என்கிற* private agency *மூலமாகத்தான் அந்தக் குளம் நன்றாகச் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், நான்கு வருஷத்திலே எங்களுடைய தளி தொகுதியிலே ஓர் ஏரிகூட தூர் வ்ாரப்படவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே ஒரு* check dam *பேவநத்தம் ஊராட்சியில் கட்டப்பட்டது. அது உடைந்து 10 வருஷம் ஆகிவிட்டது. அதையாவது செய்து தரமுடியுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 287, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு நிதி அமைச்சர்.

287—

துணைக் கருவூலம்

***33761—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூலம் ஆரம்பிக்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை திருவொற்றியூர் நகரத்தில் துணைக் கருவூல அலுவலகம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் பி. வள்ளல் பெருமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நகரம் ஒரு மிக முக்கியமான நகரமாகும். இந்நகரமானது சென்னை மாநகரத்தில் மிக முக்கிய பகுதியில் அமைந்துள்ளது. இந்தத் திருவொற்றியூர் நகரத்தில் பல அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்றன. பள்ளிகள், கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. இங்கு பணி செய்கின்றவர்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய பணத்தையும் அல்லது அரசிடமிருந்து பெறவேண்டிய நிதியையும் பெறவேண்டுமென்றால், Treasury அலுவலகம் – துணைக் கருவூலம் இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு முறையும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருக்கின்ற Pay and Accounts Office–க்குச் செல்லவேண்டியிருக்கின்றது. அங்கு சென்று, திரும்பவும் அங்கு காசோலையைப் பெற்றுக்கொண்டு, திரும்பவும் திருவொற்றியூரில் இருக்கின்ற அரசு அலுவலகத்திற்கு வந்து, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடத்திலே கையெழுத்து பெற்று, மீண்டும் அந்தக்